# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 30, 2023 Weekly E-paper ● December 30, 2023




## ‘திராவிட முழக்கம்’

### வெளியீட்டு விழா!

29-12-2023, சென்னை, முத்தமிழ்ப் பேரவை, அடையாறு.




## இந்தியாவின் தேவை திராவிட முழக்கம்!

காசு. நாகராசன்




## பழையன பா.ஜ.க, திராவிடம் புதியன!

தலையங்கம்



## ஆணவமும்,பொய்யும் அமைச்சருக்கு அழகில்லை!

புரூனோ

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 30, 2023 Weekly E-paper ● December 30, 2023


# ‘திராவிட முழக்கம்’

## வெளியீட்டு விழா!

**29-12-2023, சென்னை, முத்தமிழ்ப் பேரவை, அடையாறு.**





















# இந்தியாவின் தேவை திராவிட முழக்கம்!

காசு. நாகராசன்

அவர்களுக்கு வரலாறு இல்லை. ஏன், தரமான வாழ்க்கை கூட இல்லை. எனவே, வாழத்தெரிந்தவர்களைப் பார்த்தால் அவர்கள் வயிற்றெரிச்சல் படுவார்கள். வரலாறுகளைக் காண நேர்ந்தால் அவர்களால் பொறுத்துக் கொள்ளவே முடியாது.

வரலாறுகளை அழித்தொழிப்பது அல்லது அவற்றைப் பொய்யென்று உரைப்பது அல்லது வரலாற்றைத் திரித்து எழுதுவது இவை எதுவுமே முடியாதெனில் அந்த வரலாற்றுக்குள் உள்நுழைந்து அதையே தனதாக்கிக் கொள்வது, இதுதான் காலங்காலமாக அவர்களது வழக்கம்.

இந்துகுஷ் மலைகள், கைபர் – போலன் கணவாய் வழிகளைக் கடந்து இமயமலையின் அடிவாரத்தில் சிந்து, கங்கைச் சமவெளிகளில் இருந்த மேய்ச்சல் நிலங்களைத்தேடி அவர்கள் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு வந்தவர்கள்.




நாடோடி வாழ்க்கை என்பது துயரமானது. வலி மிகுந்தது. வரலாறு படைப்பதென்பது "வரலாறு படிப்பது போல் எளிதானதல்ல" என்பார் கவிஞர் வைரமுத்து.

தனக்கென்று ஓர் இருப்பிடம் இல்லாமல், தனக்கென்று கூடியழக்கூட ஓர் உறவுமில்லாமல் எங்கே போகிறோம்? எப்போது திரும்புவோம்? என்கிற திக்குத் தெரியாமல் போகிற பயணம் அது. அவர்கள் காட்டுமிராண்டிகளாக, மனிதநேயம் அற்றவர்களாக, நாகரிகம் என்பதை அறிந்திராதவர்களாக இருப்பதில் வியப்பொன்று மில்லை.

அதைவிட, அவர்கள் அறிந்திராத நாகரிக வாழ்க்கையை வாழுகிறவர்களைப் பார்க்கும் பொழுது அந்த நாடோடிகளுக்கு ஆவேசமும், பொறாமையும்ஏற்படும். நாகரிக சமூகத்தின் மீது கோபம் எழும். காரணம், அவர்கள் காட்டுமிராண்டிகள்.

அப்படித்தான் சிந்து சமவெளியில் வாழ்ந்த திராவிட இன மக்கள் மீது நாடோடி ஆரியர்களுக்குக் கோபம் வந்தது. என்ன இது, இவர்கள் எல்லோரும் வீடுகள் கட்டிக் குடியிருக்கிறார்கள்? வீடுகளுக்குள் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்? வயல் வெளிகளில் உழுகிறார்கள்... விதைக் கிறார்கள், அறுவடை செய்கிறார்கள்? எப்படி இவர்கள் இடம்பெயராமல் ஓரிடத்தில் தங்கி நிலையான வாழ்க்கை வாழ்கிறார்கள்? அதுவும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்? என்று, வந்த நாடோடிகளுக்கு வியப்பு, பொறாமை, கோபம் எழுந்தது. சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகள், நீண்ட அகன்ற நேர்தெருக்கள், நால்முனைச் சந்திப்புகள், பாதாளச்சாக்கடைகள், பொதுக்குளம், வீடுகளுக்குள்ளேயே கழிப்பறை, குளியலறை வசதிகள், எல்லா உணவையும் சமைத்துத் தேவைக்கேற்ப உண்ணுகிற வழக்கம், உடலை மறைப்பதற்கு மட்டுமல்லாது தோற்றத்தை அழகாக்கிடும் ஆடைகள், ஆபரணங்கள்.

தொழில், வாணிபம், விளையாட்டு, ஒன்றுகூடுதல், விழாக்கள், கொண்டாட்டங்கள் என்று ஒரு மனித சமூகம் பண்பட்டு வாழ்வதைக் கண்டு பதறுகிறார்கள் நாடோடிகளாக வந்த ஆரியக் காட்டுமிராண்டிகள்.

" ஓ... இந்திரனே, இவர்கள் செம்புக்கோட்டைகளில் வாழ்கிறார்கள். ஆடுமாடுகள் மேய்கிற வயல் வெளிகளில் இவர்கள் உழுது பயிரிடுகிறார்கள்.

இவர்களைக் கொல்லுவதற்கு, இவர்களை வேட்டையாட எங்களுக்கு வலிமை கொடு " என்று, அவர்களுடைய கடவுளிடம் வேண்டுகிறார்கள். பின்னர், இரவு நேரங்களில் திடீரென மக்கள் குடியிருப்புக்குள் ஆயுதங்களுடன் புகுந்து கொலைவெறித் தாக்குதல் நடத்துகிறார்கள்.

சிந்து சமவெளி மக்களிடமிருந்தவை எல்லாம் 'கருவிகள்'. ஆரியக் காட்டுமிராண்டிகள் வசம் இருந்தவை எல்லாம் கொலைவெறி 'ஆயுதங்கள்'. எனவே, வலிமையே வென்றது.

அமைதியாய், நாகரிகமாய் வாழ்ந்த சமூகத்திற்குள் புகுந்து ஓர் இனப்படுகொலையையும் நடத்தியவர்கள், தங்கள் வெற்றியை நெருப்பு யாகங்கள் நடத்தி அதிலே ஆடுமாடுகளைத்தூக்கிப் போட்டுத் துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்து, சுடச்சுட அந்தப் பிராணிகளைத் தின்றும், தாங்கள் காய்ச்சி வைத்திருந்த சோம-சுரா மதுவகைகளைக் குடித்தும் கும்மாளம் இடுகிறார்கள்.

காட்டுமிராண்டிகளின் தாக்குதலுக்கு அஞ்சிய நாகரிக மக்கள் தற்காப்புக்காக இடம்பெயர்ந்து விடுகிறார்கள். இப்போது பஞ்சம் பிழைக்க வந்த இடத்தில் தஞ்சம் புகுந்த மண்ணை வஞ்சகத்தால் சூழ்ச்சியால் கைப்பற்றிக் கொண்டனர் நாடோடி ஆரியர்கள்.

மண்ணைப் பிடித்தார்கள், வேறு இடங்களில் மன்னர்களைப் பிடித்தார்கள், தங்கள் மேலாதிக்கத்தை மந்திரங்களின் பேரால் நிலைநாட்டினார்கள். சிக்கலான இடங்களில், சிக்கலான நேரங்களில் எந்த விலையும் கொடுத்துக் காரியம் சாதித்துக் கொண்டனர்.

இந்த அக்கிரமங்களை எதிர்த்தவர்களை ஈவு இரக்கமின்றிப் படுகொலை செய்தார்கள். கொலைகளை எல்லாம் வழிபாடாக்கி கொல்லப்பட்ட இனத்தையே வழிபடச் செய்தார்கள்.

கல்வி கேள்வியறிவற்ற அடிமைகளாகப் பலரையும் ஆக்கினர். அவர்களைப் பலகூறுகளாய்ப் பிரித்து ஒருவருக்கு இன்னொருவரை எஜமானனாக்கி எல்லோருக்கும் இவர்களே மேலானவர்கள் ஆனார்கள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பழையன பா.ஜ.க, திராவிடம் புதியன!

**“பழையன கழிதலும்
புதியன புகுதலும் வழுவல
கால வகையி னானே”**

என்கிறார் நாலடியார் இயற்றிய பவணந்தியார். “The old order changeth, yielding Place to new” என்பது ஆங்கிலக் கவிஞன் டென்னிசன் வரிகள்.

பழையன என்பதைக் கருத்து முதல்வாதத்தில் பார்க்க வேண்டும்.

கடவுள் பெயரைச்சொல்லி, மதத்தை உருவாக்கி, கோயிலை இடிப்பதும் - கட்டுவதுமாக சனாதனத்தில் மக்களைப் பிரித்து வைப்பது, என்பது ஒதுக்கப்பட வேண்டிய பழைமை.

அதன் வழியில் மதத்தால் பிளவை உண்டாக்கிக் கடவுள் மயக்கத்தில் மக்களை வைத்து, அவர்களின் கல்வியை, தொழிலை, நாட்டின் முன்னேற்றத்தைச் சீரழித்த பார'தீய' ஜனதா கட்சி அகற்றப்பட வேண்டிய ஒரு அடிப்படைவாத பழைமைவாதக் கட்சி. இதை ஒதுக்க வேண்டும், ஒழிக்க வேண்டும்.

அதேசமயம் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் போன்ற அரசியல், சமூக சீர்திருத்தச் செம்மல்களால் ஏற்பட்டுள்ள புதிய புதிய முற்போக்குச் சிந்தனைகளை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

ஒதுக்கப்பட்டவர்கள் உணர்வு பெற்றார்கள், ஒடுக்கப்பட்டவர்கள் நிமிர்ந்தெழுந்தார்கள், மறுக்கப்பட்டக் கல்வி மக்களுக்குக் கிடைத்தது, மக்களின் வாழ்க்கை சமத்துவமாக உயிர்த்தெழுகிறது என்றால் அதுதான் திராவிடம்.

பா.ஜ.க + ஆர். எஸ். எஸ் = ஆரியம். இது தேவையற்ற பழையன.

முற்போக்கு + சமூகநீதி = திராவிடம். தேவையான புதியன.

2024இல் பா.ஜ.க என்ற பழையதைக் கழிப்போம், தோற்கடிப்போம்.

தந்தைபெரியாரின் திராவிடச் சிந்தனையின் வழிநடப்போம்.

அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டுநாள் வாழ்த்துகள் !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**


இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408




முன் பக்கத் தொடர்ச்சி...

ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்த இந்தக் கொடுமையின் அடி முடிகண்டு உலுக்கியெடுத்தவர்கள் முன்னர் சிந்துக் கரையில் வீழ்ந்துபட்ட இனத்தின் வம்சாவழியினர்.

ஆம், வடக்கே ஆரியம் வீழ்த்திய திராவிடரின் வழித்தோன்றல்கள் தெற்கே ஆரியத்தின் சூழ்ச்சியை அடையாளம் கண்டு அடித்து வீழ்த்தினர். வடக்கே ஆடிய ஆரியத் தாண்டவம் தெற்கே எழுந்த திராவிட முழக்கத்தால் அடிபட்டு வீழ்ந்தது. ஆண்டுகள் பல கடந்து ஆட்சிமுறைகள் பல மாறி, சட்டங்கள் பல இயற்றிக் குடியரசு, ஜனநாயகம் என்றெல்லாம் ஆனபின்னும் இன்னமும் தொடர்கிறது இந்த இனப்பகையும், போரும்.

2024 இல் தொடங்குகிறது இரண்டாம் கட்ட மாறுதலின் நூற்றாண்டு - இருவருக்குமே. இப்போதும் வன்மம் மாறவில்லை. குணம் மாறவில்லை. கொட்டம் அடங்கவில்லை என்பதற்கு அடையாளம் நிர்மலாக்களின் ஆணவம்.

ஈராயிரம் ஆண்டுப் பகைமுடிக்கும் போரில் நாங்கள் ஏந்திய எதையும் விட்டுவிடவில்லை என்கிற எச்சரிக்கையின் அடையாளமாய் திராவிடமாடலின் அடுத்த தலைமுறைத் தலைவர் உதயநிதியின் முழக்கமும். இன்னமும் தொடர்கிறது. அன்று தமிழ்நாடு வரை தேவைப்பட்டத் திராவிடத்தின் முழக்கம் இனி, நாளைய இந்தியாவைக் காக்க டில்லியைத் தாண்டியும் தேவைப்படுகிறது.

ஏடுகள் வழியாகவும், உரைகள் வழியாகவும், பெரியாரியல் பெரும்பணியைச் சுமந்து தமிழ்நாட்டுத் தெருக்களில் ஓயாத பரப்புரையை நடத்திவரும் பேராசிரியர் சுபவீ அவர்களை ஆசிரியராகக் கொண்டு முழங்க வருகிறது “திராவிட முழக்கம்” மாத ஏடு, இது ஆரிய சூழ்ச்சிக்கு எதிரான போர்முரசம்! ●

# ஆணவமும்,பொய்யும் அமைச்சருக்கு அழகில்லை!

**பூஞநோ**

சமீபத்தில் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் நிருபர்களிடம் பேசிய பேச்சில் எத்தனை பொய்கள்!எத்தனை ஆணவம்!!

இந்தச் சந்திப்பு எப்பொழுது நடந்தது என்பது மிகவும் முக்கியமானது. மிகப்பெரிய மழைப் பொழிவால் தென்மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டு ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் அவர் நிருபர்களைச் சந்தித்தார்.



1. மிகப்பெரிய மழை பாதிப்பு ஏற்படும் என்பதை திசம்பர் 12ஆம் தேதியே ஒன்றிய அரசு எச்சரித்தது என்றார் அமைச்சர். திசம்பர் 16ஆம் தேதி வரை ஆரஞ்சு அலார்ட் என்று தானே ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. 21 செ.மீ மழை என்றாலே ரெட் அலார்ட் அல்லவா கொடுக்க வேண்டும். 90 செ.மீ வரை மழை பெய்யும் டிசம்பர் 16வரை ஏன் ரெட் அலார்ட் தரவில்லை. நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், மழை தொடங்கிய பிறகும் கூட செந்தூர் அதிவிரைவு வண்டி இயக்கப்பட்டது ஏன்? திருவைகுண்டத்தில் இரயில் பாதி வழியில் நிறுத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் இரண்டு நாட்கள் குடிநீர், உணவின்றி தவிக்கவில்லையா? இரயில்வே துறை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் தானே உள்ளது? பிறகு ஏன் இரயில்வே துறைக்கு எச்சரிக்கை தரவில்லை?

2. தேவையான உதவிகளை ஒன்றிய அரசு செய்துள்ளது என்கிறர் அமைச்சர்.

அப்படியா? பேரிடர் நிதியானது பேரிடர் ஏற்படும் போது மட்டும் தரப்படும் நிதி அல்லவே. ஒவ்வொரு ஆண்டும் தர வேண்டிய நிதி அது. ஆண்டு தோறும் தமிழ்நாட்டிற்கு உரிய பேரிடர் நிதியானது ரூ 1200 கோடி. அதில் ஒன்றிய அரசின் பங்கு 900கோடி. அந்த நிதியானது இரண்டு தவணையில் வழங்கப்பட்டது. பேரிடர் இல்லை என்றாலும் இந்த நிதி வழங்கப்பட


வேண்டும். நாம் கேட்பது கூடுதல் நிதி. அதற்கு பதில் என்ன? பேரிடர் பாதிப்புகளை அறிய, ஒன்றிய குழு வரும் வரை ஒரு பகுதி நிதியைத் தமிழக மக்களுக்கு வழங்க உங்களைத் தடுப்பது எது?

3. தமிழ்நாடு அரசு கேட்கின்ற நிதி, நாங்கள் அளித்த வரியின் ஒரு பகுதி தானே தவிர, உங்கள் 'மரியாதைக்குரிய' அப்பன் வீட்டுப் பணம் அல்ல என்று அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கும் நிர்மலா அவர்களே, உதயநிதியின் கருத்தில் தவறு ஏதும் இல்லையே! ஓ! அந்த வார்த்தையில் உங்களுக்குப் பிரச்சனையா? 2013 நவம்பர் 13 அன்று சத்தீஸ்கரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஒன்றிய அரசின் பணம் என்ன ஆனது? ராகுல் காந்தியின் "மாமா வீட்டுப் பணமா".என்று மோடி கேட்டாரே, அவரை என்ன சொல்லலாம்?

நீங்கள் மக்களின் சேவகர் என்பதை என்று உணரப் போகிறீர்களோ தெரியவில்லை!

**சென்னை நந்தனம் 47 ஆம் புத்தகக் கண்காட்சி**

**வாருங்கள் தோழர்களே..!**




## விஜயகாந்த் மறைவு

## பேரவையின் புகழ் வணக்கம்!



தலைவர் கலைஞர் அவர்களின் அன்புக்கு உரியவர், கழகத் தலைவர் ஸ்டாலின் அவர்களின் நண்பராக விளங்கியவர் திரு. விஜயகாந்த் அவர்கள். நடிகர், அரசியல்வாதி, கட்சியின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், எதிர்கட்சித் தலைவர் இவைகளைத் தாண்டி நல்ல மனிதநேயப் பண்பாளராக விளங்கியவர் அவர். இயல்பாகப் பேசும் அவர் மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசுவார். தன்னைப் பழிப்பவரைக் கூட பழித்துப் பேசாத தனிமனித நாகரிகமும், அரசியல் நாகரிகமும் கொண்டவர். நீண்டநாள்கள் உடல்நலிவுற்றிருந்த விஜயகாந்த் அவர்கள், 28–12–2023 அன்று காலமானார். அவருக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாகப் புகழ் வணக்கம் செலுத்துகிறோம்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian